மீன்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்வது, சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிதி தாராளமாக இருக்கின்றது. அந்த நிதியைக் கொடுத்து, Mini Fishing Harbour,--தூண்டில் பாலம் கட்டித் தர ஏற்பாடு செய்வீர்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தினை, நம்முடைய மாண்புமிகு முதல்வருடன் கலந்து பேசி ஆய்வு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

69—

மீன்பிடித் துறைமுகம்

***1479—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் இரண்டாம் நிலை விரிவாக்கத் திட்டம் குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தினை இரண்டாம் கட்டமாக விரிவாக்கம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, பழையாறு மீனவர் கிராமத்தில் சுமார் ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகின்றார்கள். பழையாற்றில் 250 விசைப் படகுகள் உள்ளன. அது மட்டுமல்லாமல், பூம்புகார், திருமுல்லைவாசல், தரங்கம்பாடி, தொடுவாய் ஆகிய கிராமங்களிலிருந்து 100 விசைப் படகுகளைப் பழையாற்றிலுள்ள தங்குதளத்தில்தான் கட்டவேண்டும். முதல் தங்குதளத்தில் குறைந்தபட்சம் 30 விசைப் படகுகள் மட்டுமே

2006 ஆகஸ்ட் 22]

கட்டக்கூடிய அளவுக்கு இடம் இருக்கின்றது. மேலும், இப்பொழுது 30 விசைப் படகுகள் சுனாமியால் பாதிக்கப்பட்டு, அந்த இடத்திற்கு நிதி கொடுத்து, 30 விசைப் படகுகளைக் கட்டுவதற்குப் பணிகள் நடந்து வருகின்றன. ஆனால், பழையாறை பொறுத்தவரையில் குறைந்தபட்சம் 350 விசைப் படகுகளைக் கட்டுவதற்குத் தளங்கள் அமைத்தால்தான், அங்கு படகுகளை நிறுத்த முடியும். இல்லையென்றால், மழைக் காலங்களில் மீனவர்கள் பெருமளவில் சிரமத்திற்கு ஆளாக்கப்படுவார்கள். எனவே, இந்த ஆண்டு எத்தனை விசைப் படகுகள் கட்டுவதற்குப் பரிசீலனையில் உள்ளது? மாண்புமிகு அமைச்சரவர்கள் எத்தனை விசைப் படகுகள் கட்டுவதற்கு முயற்சி எடுப்பார்கள்? அதே சமயத்திலே, இந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சரவர்கள் மேலும் கட்டிக் கொடுப்பதற்கு மறுபரிசீலனை செய்வார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 ஆம் நாள் ஏற்பட்ட சுனாமி பேரலையின் தாக்குதலால் பழையாறு மீன்பிடித் துறைமுகம் மிகவும் சேதமடைந்ததைத் தொடர்ந்து, சேதமடைந்தவற்றின் உள்கட்டமைப்பு வசதிகளைச் சீரமைத்திட, அரசு ரூ.300 இலட்சம் ஒப்பளித்து, தற்போது மராமத்துப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும், பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் கூடுதல் மீன்பிடிப் படகுகள் பாதுகாப்பாகத் தங்கி மீன்பிடித் தொழிலில் ஈடுபட ஏதுவாக, கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளை இரண்டாம் கட்டமாக ரூ.10.28 கோடி செலவில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்த, 'அவசர சுனாமி மறுவாழ்வு சீரமைப்புத் திட்டத்தின்கீழ்' ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கென அரசால் முதற்கட்டமாக ரூ.2.168 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு முன் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால், உரிய நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆயவுப் பணிகள் முடிக்கப்பட்டவுடன், கட்டுமானப் பணிகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே அதிகப்படியான மீனவர்கள் இருக்கிறார்கள்.

பல குடும்பங்கள் மீன்பிடித் தொழிலை நம்பியிருக்கின்றன. எப்படி டாக்டர் கலைஞர் அவர்கள் உழவர்களுக்கு இடைத்தரகர்களை நீக்கி, உழவர் சந்தையை ஏற்படுத்தி சகாப்தம் படைத்தாரோ, அதுபோல, மீனவர்களுக்கும் மீனவர் சந்தையை ஏற்படுத்தி மீண்டும் சரித்திரம் படைப்பாரா இந்தச் சரித்திர நாயகன் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீனவ மக்களுக்காக நல்ல பல திட்டங்களை வாரி, வாரி வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து மிக நல்ல கருத்தாக இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்தாலோசித்து, நல்ல முறையில் தீர்வு காணலாம்.*

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 70, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ. துரைசாமி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.*

70—

பால் குளிரூட்டும் நிலையம்

*332—**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சங்ககிரியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. (ஆ) வினா எழாது.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS